198

179

ஹாவல் ஹக்!

ஆய்ப்பாடி

ரௌனகுல் இஸ்லாம் சங்கத்தாரால்

ஹிஜ்ரீ 1354-ஹு றபீஉல் அவ்வல்-மீ 12உ (14-6-35)

நபீகள் நாயக ஜனன தினத்தினிமித்தம்

வினியோகிக்கப்பெற்ற

# சத்திய நபி

இஃது

மன்னார்குடி

சத்திய இஸ்லாம் பத்திராதிபர்

பாவலர் S. M. முஹம்மது யூஸுப் ஸாஹிப்

அவர்களால் இயற்றப்பெற்று

மன்னார்குடி

பாரதி அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1935

Q7:81
N35
176070

பிஸ்மில்லாஹி

# சத்திய நபீ ஸல் அவர்களின் சரித்திரச் சுருக்கம்

## நபீகணாயக மவர்களின் அவதாரம்

உலக நிலப்பரப்பின் மத்திபமாய் விளங்கி நிற்கின்ற அறப் தேசமானது 1500 மைல் நீளமும், 1200 மைல் அகலமும் உள்ளதாகும். அதற்குக் கிழக்கில் பாரசிக வளைகுடாவும், மேற்கில் செங்கடலும், வடக்கில் ஷாம் மாகாணமும் தெற்கில் ஹிந்துமகா சமுத்திரமும் எல்லைகளாயிருக்கின்றன. அத்தேசத்தில் மக்கமாநகர் என்னும் புண்ணிய க்ஷேத்திரம் ஒன்றுண்டு என்பது யாவரும் அறிந்ததே யாகும். அப் புண்ணிய க்ஷேத்திரத்தைச் சுற்றிலும் உள்ளவர்கள் சுமார் 1500 வருஷங்களுக்கு முன்னே மகா மௌட்டியம் வாய்ந்த மூடர்களாயும், யாருக்கு மடங்காத முரடர்களாயும், பஞ்சமா பாதகங்களையும் வெகு பொறுப்புடன் செய்துவந்த பாவிகளாயும், தம்மினும் மெலியவர்களைத் தலைக்காட்டாதொழிக்கும் தூர்த்தர்களாயும், முன்னோர்களிடம் இறைவனால் கொடுக்கப் பெற்றிருந்த வேதங்களைப் புரட்டி மாறு செய்கின்றவர்களான வம்பர்களாயும், சுருங்கச் சொல்லுமிடத்து — மனுஷத்தன்மையே யில்லாத காட்டு மிருகாண்டிகளாயுமிருந்தனர். அக்காலத்திய உலக மக்கள் யாவரும் ஞானமற்ற விக்ரகத் தொழும்பர்களாயிருந்த காரணத்தால், ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தார்க்கும், ஒரு நாட்டார் மற்றொரு நாட்டார்க்கும் முன்னேற்றச் சீர்திருத்தங்களையும், நல்லொழுக்கங்களையும் எடுத்துக்காட்ட முடியாமலே யிருந்தனர். எங்கும் அஞ்ஞான இருள் பரந்து, நன்மை யின்னது தீமை யின்னது என்று பகுத்தறியும் முறையில்லாமல் "தடி யெடுத்தவனே தம்பிரான்" என்று அக்கிரமம் அதிகமாயிருந்த அதுசமயம், இறைவனருளால் உலகத்தைச் சீர்படுத்தி நேர்வழியிலாக்க ஒரு ஒப்பற்ற தீர்க்கதரிசி (இரஸூல்) வரவேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்தது. அவ்வாறு வரப்போகின்றவர், ஒரு தேசத்திற்கோ ஒரு சமூகத்திற்கோ மட்டுஞ் சொந்தமானவரா யில்லாமல், அகில மக்கள் அனைவர்க்கும் கருணாநிதியான இறைவனின் திருவேதத்தைப் போதித்து, யாவரையும் ஏக சகோதரத் தன்மையிலாக்கி, ஞானந்திகழுஞ் சாந்தியைப் பரத்துகின்ற சன்மார்க்கத் திலகமாயிருத்தல் வேண்டியிருந்தது. அத்தகைய மகான், முன்னுள்ள வேதப் பிரமாணத்தின்படி அகில தேசங்களுக்கும் நடுவிலுள்ள அறப்தேசத்தில் திரு மக்கமாநகரிலேயே உதயமாகுதல் வேண்டு

மென்றும் எதிர்பார்க்கப் பெற்றது. எல்லாக் கண்டங்களுக்கும் பொதுவான தீர்க்கதரிசியாய் வருகின்ற மகான் எங்கோ ஒரு தனிப்பட்ட ஒதுங்கிய நகரில் பிறந்துவிடாமல், தமது இணையற்ற பொதுத்தன்மையை யெண்பிக்க ஒரு நடுநாயகமாய்ப் பிறக்க வேண்டிய அவசியமும் இருந்ததே யன்றோ? அவ்வாறு பிறந்த பெருமான் யாரென்பதையே இங்குக் கூறுவோம்.

திரு மக்கமாநகரில் கீர்த்தி வாய்ந்த "குறைஷீ" குலத்தில் அப்துல் மனாப் என்றொரு பெரியாரிருந்தார். அவருக்குப் பின், அவரது புதல்வர் ஹாஷிம் என்பவராவர். இவருடைய சந்ததி அப்துல் முத்தலிப் என்பார் மக்கமாநகரின் மக்களுக்குப் பெருந்தன்மையாளராய் விளங்கிவந்தார். அவருக்குப் பல புத்திரர்களுண்டு. அவர்களில் அபூதாலிப், அப்துல்லாஹ், ஹம்ஜா என்பவர்கள் பிரசித்தி பெற்றவர்கள். அப்துல்லாஹ் என்பவரின் மனைவியாருடைய பெயர் ஆமினா என்பதாகும். அவ்விருவர்களின் தவப்பேற்றால் ஆமினா அவர்கள் கர்ப்பமானார்கள். கர்ப்பத்தின் ஆறாந் திங்களில் அப்துல்லாஹ் வர்த்தகத்தின் பொருட்டு மதீனா நகருக்குச் சென்று திரும்பி வருகின்ற வழியில் "அப்வா" என்னுஞ் சிற்றூரில் சகல தத்துவ இறைவனின் விதிப்படி விண்ணுலகடைந்தார். பின்பு;

ஆமினா அவர்களின் கர்ப்பம் முதிர்ந்து, ஈரைந்து திங்களும் நிறைந்து பிறந்த குழந்தை யாரென நினைக்கின்றீர்கள்? அதுதான், உலகத்தைத் தெளிவித்து யாவர்க்கும் மக்கள் தன்மையைக் காட்டி, ஞானஜோதியைப் பிரகாசிக்கச் செய்வதற்காகவே ஏக வல்லவனான அளவிடற்கரிய அருளாளனால் அனுப்பப் பெற்ற திரு சத்திய நபீ முஹம்மது (ஸல்) அவர்களின் குழந்தைப் பருவமாயிருந்தது. அவ்விதம் அந்த நபீ பெருமான் (ஸல்) அவர்கள் உதயமாகிய தினம், யானை யாண்டின் றபீஉல் அவ்வல் மாதம் பன்னிரண்டாந்தேதி (கி. பி. 570-ம் ஆகஸ்ட் மாதம் 29ந்தேதி) திங்கட்கிழமை வைகறைப்பொழுதே என்று சொல்லப் படுகிறது.

அவ்வாறு அவதரித்த குழந்தையை ஆமினா அவர்களும், அக் குழந்தை நபீயின் பாட்டனாரான அப்துல் முத்தலிப்வர்களுமாய் வெகு அருமையாக வளர்த்தனர். குழந்தைக்குப் பாலூட்டிச் செவிலித்தாயாய் அமைந்திருந்த பெருமாட்டி "ஹவாஜின்" என்னும் இனத்தைச் சேர்ந்த "ஹலீமா" என்பவர்களே யாவர். அம் மாண்பு மிக்க செவிலித்தாயார் இளம் பருவத்திலிருந்த நபீகள் நாயகத்தை நான்கு பிராயம் வரையில் வெகு பிரியமாய்

வளர்த்துப் பின்பு இளைஞரின் தாயாரகத்தில் கொண்டு வந்து விட்டுவிட்டார். அதன்பின், இளந்தோன்றலின் ஆறுவது பிராயத்தில் ஆமினாவும் இளைஞருமாய் மதீனமா நகர்க்குச் சென்றுவிட்டுத் திரும்பி வரும் வழியில் தாயாரும் இறைவனிட்டுள்ள கட்டளையின்படி உயிர் துறந்தார். ஆ! இளம்பிராயத்திலுள்ள எழில் நபீ (ஸல்) அவர்களின் மாதா பிதாக்கள் மறைந்த அவசரந்தானென்னே! அதன்பின்,

எந்தலாம் இளம்பருவத்தின் நாயகத்திலகத்தை அவர்களின் அருமையான பாட்டனார் அப்துல் முத்தலிப் அவர்கள் வெகு பிரியத்துடன் ஆதரித்து வந்தார்கள். அவ்வாறு போஷித்து வருங்காலை, நன்னபீச் சிறாரவர்களின் எட்டாவது பிராயம் நிகழ்ந்து கொண்டிருக்கும்போதே அப் பாட்டனாரவர்களும், தாம் பாதுகாத்தது போதுமென்று அகன்று விடுவது போல் காலகதியடைந்தார்கள். எட்டாட்டைப் பிராயத்திலுள்ள எங்கள் இரஸூலாம் சிறாரை எட்டிப் பிடித்த வறுமையின் வல்லபந்தானென்னே! "கொடிது கொடிது வறுமை கொடிது, அதனினுங் கொடிது இளமையில் வறுமை" ஆகையால் உலக வாழ்க்கையில் திரவியமில்லா வறுமை யொருபுறமிருக்க, மிக்க இளமையிலேயே தாய் தந்தையற்று, போஷித்துவந்த பாட்டனாரும் 'பொருக்கென' இறந்துபோவ தென்றால், இதனினும் கொடிய வறுமையொன்று இவ்வுலகிலே இருக்குமோ வென்று எண்ண வேண்டியதிருக்கின்ற தன்றோ? ஆம்! உலகத்திற்கெல்லாம் ஒரே தீர்க்கதரிசியாய் வந்த ஒப்பற்ற இரஸூல் அவர்களை இறைவன் தனது வல்லமையைக் கொண்டு ஆச்சரியமான விதத்தால் போஷித்தானென்பது தோன்றவே இவ்வாறு அமைத்தருளினன்போலும்!

## நபீகள் பெருமானாரின் பாலியப் பருவம்

அருமையாக வளர்த்த பாட்டனாரவர்களுக்குப் பின் பெரிய தந்தையாகிய அபூதாலிப் அவர்கள் நாயகத்தை மிகப் பிரீதியுடன் பாதுகாத்து வருகின்ற பொறுப்பை யேற்றுக் கொண்டார்கள். அந்தப் பெரிய தந்தையார் தமக்குள்ள பத்து மக்களினும் மேன்மையானவராக நமது நாயக பாலியரவர்களைப் பேணி வந்தார்கள். அங்ஙனம் பேணுவதற்குக் காரணமில்லாமலுமில்லை. நமது நாயகமவர்கள் இளம்பிராயத்திலிருந்தே பெரியோர்களிடம்மரியாதையாகவும் சிறியோர்களிடம் அன்பாகவும் நடந்துகொள்வார்கள். சிறுவர்களுக்குள்ள வீண் விளையாட்டுக்களில் இவர்கள் சம்பந்தப்படுகிறதேயில்லை. பொது

வாக யாவர்க்கும் தங்கள் சிறு பிராயத்திற்குத் தக்கதான உபகாரங்களை அதிக உவப்புடன் செய்துவந்தார்கள். விளையாட்டிற்கேனும் பொய்யைச் சொல்லாதவர்களா யிருந்ததோடு, தாங்கள் பிறர்க்குச் செய்துள்ள வாக்குறுதியை எவ்விதத்திலும் செய்து முடிப்பவர்களாகவு மிருந்தார்கள். இதனாலேயே யாவரும் அவர்களை அவ்விளம் பிராயத்திலேயே "அல் அமீன்" (நம்பிக்கைக் குரியவர்) என்றழைப்பது வழக்கமென்றால், அவ் விளஞ்சிறுரான நாயக பாலியரின் நற்குண நன்னடக்கையை எவ்வாறு கூறி முடித்தல் முடியும்?

இங்ஙனம் சத்திய நபீ (ஸல்) அவர்கள் தங்கள் 10, 12 பிராயங்களில் தங்களுக்குச் சொந்தமானதும், தங்களின் பெரிய தந்தையாரவர்களுக்குச் சொந்தமானதுமான ஆடுகளை மேய்த்து வந்தார்கள். இதற்கு முன்னுள்ள தீர்க்கதரிசிகளிற் பலரும் இவ்வாறே தங்களின் இளம்பிராயங்களை மேய்க்குந் தொழிலில் கடத்தியிருக்கின்றனராகத் தெரிய வருகின்றனர். இத்தொழிலின் அந்தரங்க நோக்கமென்ன வென்று சிறிது ஆராய்வோமாயின் உண்மை விளங்காமற்போகாது. தீர்க்கதரிசிகள் யாவரும் பிறகு உலக மக்களைச் சீர்படுத்தப்போகின்ற காரணத்தால் அவர்களுக்கு இயற்கையாகவே சகிப்புத் தன்மையும், அன்புடைமையும் அத்தியாவசியமாய் வேண்டியிருக்கின்றது. அத் தீர்க்கதரிசிகள் தங்கள் இளம்பிராயத்தில் ஆடு மாடுகளை மேய்ப்பதால் ஜீவப் பிராணிகளின் பேரில் கருணையும், அவைகளைத் தங்களின் நோக்கத்திற் கொத்தபடி நடத்தாட்டிவைக்க எடுத்துக்கொள்ளும் முயற்சியால் சகிப்புத்தன்மையும் இனியில்லாதவிதமாக அமைந்து விடுகின்றன. இவ்விரு அருங்குணங்களையும் இளமையிலேயே பெற்றுவிடுகின்ற தீர்க்கதரிசிகள், பிறகு பகுத்தறிவுள்ள மக்களைச் செவ்வையான மார்க்கத்தில் பொறுப்புடன் நடத்தாட்டி, யாவரையும் ஒற்றுமையிலாக்கல் மிக எளிதாகிவிடுகின்றதல்லவா? இது காரணம் பற்றியே நமது இளம் பாலிய நாயகமும் மேய்ப்பாயிருந்தார்கள் என்பதில் என்ன புதுமை யிருக்கின்றது? அவ்வாறு மேய்க்குந் தொழிலில் ஈடுபட்டுவருங் காலங்களில் வனாந்தரங்களிலும் மற்றும் சுற்றுப்புறங்களிலும் இறைவனால் படைக்கப் பெற்றிருக்கின்ற சிருஷ்டிகளின் அமைப்பையும், அவைகளால் ஏற்படும் பிரயோஜனங்களையும் ஆழ்ந்தாராய்வார்கள். வானத்தைப் பார்த்து அங்கிருக்கும் சூரிய சந்திர நக்ஷத்திரங்களின் அந்தரங்க சூட்சங்களை உற்றுணர்வார்கள். தாங்கள் உணர்ந்த விஷயங்களைப் பலரிடத்தும் தைரியமாய் வெளியிட்டு மகிழ்வார்கள். இம்முறைகளா லெல்லாம் இணையற்ற மேய்ப்பாய் விளங்கிவந்தார்கள்.

அவர்களின் 14வது பிராயத்தில் தங்களின் பெரிய தந்தையவர்களுடன் சேர்ந்து ஷாம் எல்லைப்புறத்திற்கு வர்த்தகத்தின் பொருட்டுச் சென்றார்கள். அவ்வாறு சென்றபொழுது பல நகரங்களின் நடவடிக்கைகளையும், பலவகை மனிதர்களின் நடையுடை பாவனைகளையும், வர்த்தக முறைமையையும், வெகு நுட்பமாய் உணர்ந்துகொண்டார்கள். பிரயாணத்தால் மனிதர்களுக்கு ஏற்படும் அனுகூலங்களை வர்த்தகக் கூட்டத்தார்களுடன் சென்ற பாலிய நபீ நன்குணர்ந்து கொண்டார்கள். இவர்கள் சேர்ந்திருப்பதால் பிரத்தியேகமான ஒரு நன்மையை அந்நகர் வாசிகள் அடைந்துகொண்டு வந்தார்கள். அதாவது எந்த நியாயத்திற்கும் ஒரு முடிவு தெரிந்துகொள்ள அல் அமீனிடமே (நாயகத்தினிடமே) வருவது வழக்கம். அப்படி நியாயந் தெரிந்துகொள்ள வருகிறவர்களுக்கு நமது பாலியத் திலகம் சத்திய நபீ (ஸல்) அவர்கள் இனி எவராலும் கூறி முடிக்க முடியாத விதமான முறையில் நீதியைக் கூறி, அவர்களைச் சமாதானப்படுத்தல் ஆச்சரியப்படக்கூடிய விதமாயிருப்பது வழக்கம். உதாஹரணமாக:— அது சமயத்தில் மனிதர்கள் நீதியுணராமல் ஒருவரையொருவர் அநீதியாகக் கொல்வதும், வீண் முயற்சியால் பெருங் கலகங்கள் விளைப்பதும், பிறர் மனையாட்டிகளை வம்பித்துக் கைப்பற்றுவதும் சகஜமாயிருந்தன. அவைகளைப் போக்கி யாவரும் பயமில்லாமல் வாழச்செய்விக்க வேண்டுமென்னுந் திண்ணிய எண்ணத்தைக் கொண்டுள்ள நமது சத்திய நபீ (ஸல்) அவர்கள் ஒரு நல்ல சமயத்தை எதிர்நோக்கி யிருந்தார்கள். இப்படி யிருக்கும்போது, "பனீகைஸ்" என்னும் கூட்டத்தார்க்கும் குறைஷிகளுக்கும் நடந்த யுத்தத்திற்குப் பின்னால் ஏற்பட்ட உடன்படிக்கையில் நீதியையும் ஐக்கியத்தையும் நிலை நாட்ட நல்ல நிபந்தனைகளைச் சாதுரியமாய்ச் செய்துவைத்து விட்டார்கள். அந்த நிபந்தனைகளாவன:— 1. இழிந்த செயல்களை யாவரும் நீக்கவேண்டும். 2. யாவரும் பயமற்று வாழும்படி செய்யவேண்டும். 3. வழிப்போக்காளர்களுக்கு நல்ல சௌகர்யத்தைச் செய்துகொடுக்க வேண்டும். 4. ஏழை எளியோர்க்கு உதவிபுரியவேண்டும். 5. துன்பங்களை உண்டாக்குகிறவர்களைத் தண்டித்து, துன்பப் படுகின்றவர்களுக்குப் பரிகாரஞ் செய்தல் வேண்டும் என்பவைகளே யாகும்.

இத்தகைய நிபந்தனைகள் ஏற்பட்டதன்பின் அந்நாட்டில் எதிர்பார்த்தில்லாததோர் அமைதி நிலவ ஆரம்பித்துவிட்டது. சங்கங்களை உண்டுபண்ணி நிபந்தனைகளையுடைய சட்டதிட்டங்களை நியமிப்பதால் உண்டாகும் பயனை முதன்முதலில் உலகத்தோர்க்கு எண்பித்துக்காட்டி நிலை நாட்டியவர்கள் நமது சத்திய நபீ (ஸல்) அவர்களே யாவார்களென்பது எவரும் மறுக்கமுடியா உண்

மையே யாகுமன்றோ? இவ்வாறு தங்களின் இணையற்ற வெற்
றியை வெளித்தோன்ற வைத்துக்கொண்டு வருகின்ற நாயகம்
(ஸல்) அவர்கள் இவ்வளவிற்கும் எழுதப்படிக்கத் தெரியாதவர்
களாகவே யிருந்தார்கள். என்னே! சத்திய நபீக்கு இறைவன்
கொடுத்திருந்த மகிமை! தனது சத்திய நபீக்கு மனிதர்களி
லிருந்து யாரும் குருவாய் வருதல் கூடாதென்பதே அவ்வாண்ட
வனின் திருவுள்ள நாட்டம்போலும்! இங்ஙனம் எழுதப்படிக்கத்
தெரியாத பாலியரிடம் தோன்றுகின்ற அருங்குணங்களைக் கண்
ணுற்ற அந்நாட்டினர் "உம்மீநபீ" (எழுதப்படிக்கத்தெரியாத நபீ)
என்றும் அழைக்கத் தொடங்கிவிட்டனர். அந்நாட்டில் எழுதப்
படிக்கத் தெரியாத மக்கள் எத்தனையோ கோடிப்பேர்களிருக்கும்
போது அவர்களையெல்லாம் அவ்வாறு அழைத்துவிடாமல், எழு
தப் படிக்கத் தெரியாதவர்களிடந் தோன்றாத புதுமைகள் தோன்
றுகின்ற நபீகள் நாயகத்தின் தனிப்பட்ட ஒப்பற்ற தன்மை
வெளிக்குத் தெரியவேண்டு மென்றே அவ்வாறு "உம்மீநபீ"
என்று சிறப்பாயழைக்க முற்பட்டார்கள்.

## சத்திய நபீ அவர்களின் விவாக வைபவம்

இவ்வாறு சத்திய நபீயின் வாழ்நாள் ஒவ்வொன்றும் பொது
மக்கட்கு அனுகூலஞ்செய்து அவர்களை நேர்மையி லாக்கு
வதிலே கழிந்து வரும்போது, இடையிடையே வர்த்தகக் கூட்டத்
தார்களுடன் சேர்ந்து வாணிபத்தில் நல்ல தீக்ஷண்யம் பெற்று
வர்த்தகக்குழாத்தினர்க்கு ஓர் வழிகாட்டியாய்த் தோன்றினார்கள்.
இந்நிலையில் அந்த மக்கமா நகரின் பெரும் வர்த்தகரான 'குவை
லித்' என்பவரின் புத்திரியாகிய மாண்புமிக்க "கதீஜா" என்னும்
பெருமாட்டியா ரவர்கள், அந்த நகர் குறைஷ்களின் வர்த்தகச்
சரக்குக்களெல்லாம் ஒரு பங்காயிருக்க, தங்களின் சரக்குக்கள்
மட்டும் ஒரு பங்காயிருக்கும்படியான அத்தனைத் திரண்ட திரவிய
முடையவரா யிருந்தார்கள். அப்பெருமாட்டியாரவர்கள் புதிதாய்க்
கிளம்பி வெற்றி பெருகின்ற சற்குணக் களஞ்சியமான நமது
நபீகள் பிரான் (ஸல்) அவர்களின் கீர்த்தி வாய்ந்த மேன்மைச்
சுபாவங்களையும், வர்த்தகப் பொறுப்பில் ஆற்றுகின்ற சாமர்த்தி
யத்தோடு கூடிய சாதுரிய உழைப்பையும், களங்கமற்று யாவர்க்
கும் நீதிகளைப் போதிக்கும்படியான தெளிந்த சிந்தையோடு
கூடிய இன்சொல் வன்மையினையும், பிறர் பொருளைக் கவருங்
கெட்ட எண்ணமின்றி நாணயப் பொறுப்பில் நடந்து காட்டுகின்ற
நன்னடைகளையுங்கண்டு, தங்களின் சரக்குக்களைக் கொண்டுபோய்
வியாபாரம் செய்வதில் பிறருக்குக் கொடுக்கும் இலாபத்தை விட
இரட்டிப்பாய் நமது நபீகள் நாயகம் இரஸூல் (ஸல்) அவர்களுக்

குக்கொடுப்பதாய் வாக்களித்தார்கள். அதற்கு உடன்பட்ட நமது வாலிப நபீயவர்கள் அவ்வாறே சரக்குக்களைக் கொண்டுபோய் நல்ல ஊதியத்திற்கு விற்றுவந்தார்கள். அம்முறை நாயகம் (ஸல்) அவர்கள் செய்துவந்த வியாபாரத்தைப் பற்றி நகர் முழுவதும் போற்றிப்புகழ ஆரம்பித்துவிட்டார்கள்.

நமது நாயகம் அவர்கள் வெள்ளைகலந்த சிவந்த நிறமும், நடுத்தர உயரமும் உள்ள மேனியை உடையவர்களாயும், பிரகாசமாய் சாந்தந்தவழும் வதனமும், விசாலமாய் அகன்று பரந்த மார்பும் உடையவர்களாயும், அழகிய நடையும், கருணையோடு பொருந்திச் சாத்விக பார்வையு முடையவர்களாயும், சிவந்த இதழ்களும் கனிந்த மொழியும், புன்னகையோடு கூடிய வாயு முடையவர்களாயு மிருந்தார்கள். கடியநடை, வெடிசிரிப்பு, கொடியபார்வை, குரோதச்சிந்தனை, டாம்பிகச் செலவு, படாடோப வாழ்க்கை முதலியவை நமது நபீகள் திலகம் (ஸல்) அவர்களிடம் ஒருபோதும் தோன்றியதே யில்லை. உடையில் பரிசுத்தமான வெள்ளை யுடையும், கறி பதார்த்தத்தில் கீரை வகை சுரைக்காய் முதலியவைகளும், பழவகைகளில் பேரீந்து, இலந்தை முதலியவைகளும் மிதபோஜனமும் நாயகரவர்கட்கு மிக்க விருப்பமானவைகளாகும்.

இத்தகைய அழகும் அருங்குணங்களும் ஒருங்கே திரண்டு உருவெடுத்து வந்ததைப்போன்ற சத்திய நபீ (ஸல்) அவர்களை மணந்துகொள்ள 40 பிராயமும், திரண்ட ஐசுவரியமும் உள்ள மாண்புமிக்க கதீஜா நாயகியவர்கள் எண்ணினார்கள். இந் நாயகியாரவர்கள் முன் இரண்டுமுறை வாழ்க்கைப்பட்டு ஒரு சில குழந்தைகளுக்குத் தாயாயிருந்ததுடன், அதுசமயம் மங்கிலிய மிழந்தவர்களாயு மிருந்தார்கள். இம் மூதாட்டியா ரவர்களின் சற்குணங்களுக்கும், அழகுக்கும், திரவியத்திற்கும் இச்சைகொண்ட பல திரவியவந்தர்கள் மணப் பொருத்தங் கேட்டனுப்பியும் அவர்களை யெல்லாஞ் சம்மதியா திருந்து வந்த நாயகியாரவர்கள், நமது நாயகமவர்கள் விஷயத்தில் மனமொன்று பட்டுத் தாமே விவாக முயற்சிக்கு முன் வந்ததும், சர்வ சற்குணங்களும் ஒருங்கே வாய்க்கப்பெற்றுப் பேரழகு குடிகொண்டு, அந்நாட்டுப் பெரியோர் களெல்லாரும் போற்றி நிற்கும் வண்ணம் செல்வாக்குடன் விளங்கி நின்ற வீரியப்புருஷத் திலகமாகிய நபீகள் நாயகம் (ஸல்) அவர்கள், தங்களின் 25வது பிராயத்திலே மேற்கூறப்பெற்ற முதுமையடைந்த பெருமாட்டியாரவர்களை மணந்துகொள்ள ஒப்புக்கொண்டதும் அந்நகர்வாசிகட்குப் புதுமையாகவே யிருந்தது. இருந்தாலும், அக்காலத்தில் அந்த அறப் நாட்டில் பெண்களைக்

கேவலமா யெண்ணிப் பெண்குழந்தை பிறந்தவுடனே வாளைக் கொண்டு வெட்டி யெறிந்துவிடுவார்கள். அப்போப்பட்டவர்களிடம் முதிர்ந்த வயதுடைய விதவையர்கள் எவ்விதத் தாழ்ந்த நிலைமையில் கருதப்பட்டிருக்க வேண்டுமென்று நினைத்துப் பார்ப்பதும் அவசியமே. அதே காலத்தில் இந்தியாவில் பெண்களை உடன்கட்டை யேற்றிவிடுவார்கள். கைம்பெண்களைக் கண்டுவிட்டால் தாங்கள் நினைத்துப் போகுங் காரியங்களுக்குத் தடையேற்பட்டுவிடுமென்று நம்பி, விதவைகளை மிருகங்களினுந் தாழ்வாய் நடத்திவந்தார்கள். வையகமுழுதும் இப்படி யிருக்குங் காலத்தில், பல நகரங்களுக்கெல்லாஞ் சென்று வர்த்தகம் நடாத்திகீர்த்திவாய்ந்து, போற்றப் பெற்று வந்த அந்த வீரியங்கொண்ட வாலிபக் கட்டழகின் நாயக நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் தங்களின் சரீர இச்சையைப் பெரிது பாராமல், உலகத்தின் விதவைப் பெண்மணிகளின் முன்னேற்றத்தைக் கோரியே அவ்வாறு மணந்துகொண்டார்க ளென்று பறையறைந்து கூறுவோம். அதுவே சரியென்பதற்கு அத்தாக்ஷியாக அவர்களின் இல்லறப் பரிசுத்த வாழ்க்கையையே யெடுத்துக்கொள்ளலாம். ஒவ்வொரு புருஷரும் தத்தமக்கு இஷ்டமான எத்தனைப் பெண்களை வேண்டுமானாலும் மணந்துகொள்வது ஒரு கௌரவமான வாழ்க்கையாகவே கருதப்பட்டு வந்த அந்தச் சமயத்தில், நமது சத்திய நபீ (ஸல்) அவர்கள் அந்த மூதாட்டியுடனே மட்டில் தங்களின் 25 வயதிலிருந்து 50 வயது வரையில் ஏக பத்தினி விரதராய் வாழ்ந்தார்களென்றால், அவர்களின் வாழ்க்கையிலிருந்த இச்சையற்ற பரிசுத்தத் தன்மையை எவ்வாறு புகழ்தல் சாலும்!

## நபீப்பட்டத்தின் காட்சி

அவ்வாறு மணமுடித்து இல்லறத்தை நடாத்திவந்த நம் சத்திய நபீ (ஸல்) அவர்கள் அடிக்கடி தனித்த இடத்திலிருந்து இறைவனைத் தியானஞ் செய்துகொண்டு, இம் மானிலத்தில் மருண்டுகிடந்து வெறியாடும் மக்களை எவ்வாறு ஒன்றுபடுத்தித் தெளிந்த ஞானவான்களாக்கலாம் என்றுஞ் சிந்தித்து ஆழ்ந்த யோசனையிலிருப்பார்கள். மிருதமாய் மக்கமா நகரின் புறத்திலுள்ள "ஹிரா" வென்னும் மலைக்குகையில் தனித்திருந்து அருந்தவம் புரிந்து இறைவனுடைய அருட்பிரவாகத்தை யெதிர் நோக்கியிருப்பார்கள். அந்நிலையில் அவர்கள் ஒரு மன்னரைப் போல் அறுசுவையோடுண்டு சுக போகங்களில் சுகித்திருக்கத் தக்கவிதத்திலிருந்தும், பொறிமாவையும் தண்ணீரையும் ஆகாரமாய் உட்கொண்டு மலைக்குகையில் தவமிருந்துகொண்டும், மக்களிடம் பொதுவாக அன்புகொண்டு அவர்களின் குறைகளைத் தங்களா

வானமட்டில் தீர்த்துத் திருப்தி செய்துகொண்டும் 40 பிராயம் வரையிலிருந்தார்கள். கணவரவர்களின் திருவுள்ளக்கிடக்கையை உணர்ந்த தர்மபத்தினி யாரான கதீஜா நாயகியாரவர்கள் அந்த எம்பிரான் (ஸல்) அவர்களுக்குத் தம்மால் எவ்வளவு தொண்டு புரிய முடியுமோ அவ்வளவு தொண்டுபுரிந்து நாயகமவர்களின் உள்ளத்தைத்திருப்தி செய்துகொண்டு வந்தார்கள்.

இவ்வாறு நடந்துவருங்கால் சத்திய நபீ (ஸல்) அவர்களின் நாற்பதாவது பிராயம் பூர்த்தியானபின் ஒருநாள் நாயகமவர் களுக்கு வானத்திலிருந்து ஒரு ஜோதிமய சிம்மாஸனமானது இறங்கியது தெரிந்தது. அவ்வாறு தெரிந்ததை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்தச் சிம்மாஸனத்திலிருந்து ஒளிவான ஒரு உருவம் தென்பட்டு இறங்கிவந்து நபீ முஹம்மது முஸ்தபா ரஸூல் (ஸல்) அவர்களைக் கட்டித்தழுவி ஆலிங்கனஞ் செய்து, "நீங்கள் ஆண்டவனின் திருத்தூதராயிருக்கிறீர்கள்; இது உறுதி" என்று சுபசோபனங் கூறியது. அந்த உருவந்தான் அடிக்கடி நாயகம்வர்களிடம் வந்துபோகின்ற வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்களாயிருந்தார்கள். இந்த ஆச்சரிய விதமான சம்பவத்தை நபீ இரஸூல் முஹம்மது (ஸல்) அவர்கள் தங்களின் வீட்டிற்குச் சென்றவுடன் மாண்புமிக்க கதீஜா பிராட்டியாரவர்களிடஞ் சொன்னார்கள். அவ்வுத்தமப் பத்தினியாரவர்கள் இரஸூல் நாயகம் (ஸல்) அவர்களுடனேயே இருந்து அவர்களின் ஒப்பற்ற நற்கிரியைகளைக் கண்ணோக்கி வந்தவர்களாதலின், இது சம்பவத்தின் மெய்ம்மையை அப்படியே ஒப்புக்கொண்டார்கள். நபீகள் பெருமானார் (ஸல்) அவர்களின் நபீப்பட்டத்தை (நுபுவ்வத்தை) முதன் முதலில் ஒப்புக்கொண்டு இஸ்லாத்திலானவர்கள் இவ்வம்மையாரவர்களேயாவர். அதன்பின் நபீகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாங்கள் கண்டவற்றையுங் கேட்டவற்றையும் பொதுக்கூட்டமொன்றில் வெளியிட்டுச் சொல்லி, "இதை யாவரும் ஒப்புக் கொள்கின்றீர்களா!" என்று வினவினார்கள். கற்றுணர்ந்தவர் களும், தலைமைக்காரர்களும், பாலியர்களும், விருத்தாப்பியர் களும் கூடியிருந்த அந்தக் கூட்டத்தோர் சத்திய நபீ (ஸல்) அவர் களின் புது மொழியைக்கேட்டு ஒன்றுங்கூற இயலாதவர்களாய் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தவண்ணம் சப்தமின்றியிருந்தனர். இறைவனின் திருத்தூதாகிய இரஸூல் திலகம் (ஸல்) அவர் களின் சத்திய மொழிக்குச் செவிசாய்க்கின்றவர்கள் அக் கூட்டத் தில் இல்லாமல் போய்விட்டார்களென்று நினைக்கின்றீர்கள்? இல்லை, இல்லை; அக்கூட்டத்தின் நடுவிலிருந்து குதித்தெழுந்தார் ஒரு வாலிபர். அவர்தாம் பதின்மூன்று பிராயத்தினரான அலீ (ரலி) அவர்களாயிருந்தார்கள். எழுந்து "ஹே! சபையோர்களே!

கவனியுங்கள்" என்று கூறிவிட்டு, நபிகள்பிரான் (ஸல்) அவர்களைப் பார்த்து, "தாங்கள் அல்லா(ஹ்)வின் திருத்தூதர் என்பதை யான் மனப்பூர்வமாய் ஒப்புக்கொள்கின்றேன்; இது சத்தியம்" என்று தைர்யத்துடன் வீரியமாய்க்கூறி இஸ்லாமானார்கள். இவர்கள்தாம் இரண்டாவதாக இஸ்லாத்தை ஒப்புக்கொண்டவர்கள். இதைக்கண்ட கூட்டத்தினர் கைகொட்டி நகைத்துப் பரிகசித்தார்கள். அன்றைக்குப் பதின்மூன்று வயதின் பாலியரொருவர் மட்டும் ஒப்புக்கொள்ளும்படித் தோன்றிய இஸ்லாம், இன்றைக்குச் சுமார் ஐம்பது கோடி முஸ்லிம்களை (உலக ஜனங்களில் மூன்றிலொரு பங்கினரை)த் தன்னகத்தேபெற்று நிற்குமென்பதை அக்கூட்டத்தோர் நினைத்திலர் போலும்! என்னே சத்தியத்தின் வெற்றி!

அவ்வாருன நபிகள் பெருமானர் (ஸல்) அவர்களின் புதிய தோற்றத்தைக் கண்ட அந்நகர்வாசிகள் நபிப்பட்டத்தின் மெய்ம்மையை உணர முடியாக் காரணத்தால் எம்பிரான் (ஸல்) அவர்களைத் தூற்றித் துவேஷிக்கத் தொடங்கினர்கள். ஆதலின், நாயகமவர்களின் அத்தியந்த நண்பர்களாய் உள்ள விசுவாசிகள் மட்டும் நபிப்பட்டத்தை ஒப்புக்கொண்டு இஸ்லாத்தைத் தழுவிச் சாந்தியாளர்களாய் விளங்கலானர்கள். அவ்விதம் நாயகமவர்களின் சாதாரண அடக்கமான முயற்சியின்பயனுப் மூன்று வருஷங்களில் நாற்பது பேர்கள் இஸ்லாமானர்கள். அதன் பிறகு,

## இஸ்லாத்தின் ஜோதி உலகில் பரவியது

இஸ்லாத்தைப் பகிரங்கமாய்ப் பிரசாரஞ் செய்யும்படி நபிகள் திலகம் இரஸூல் (ஸல்) அவர்களுக்கு இறைவனிடமிருந்து உத்திரவு வந்தது. உடனே நாயகமவர்கள் அந்த நகரின்கண் பாம்பரையாய்ப்போற்றப்பெற்று தெய்வாலயமாய்க் கருதப்பெற்று வந்த கஃபத்துல்லா(ஹ்)விற் போய் நின்று, இறைவன் ஒருவன் என்பதையும், தாம் அவனுடைய தீர்க்கதரிசி என்பதையும் பகிரங்கப்படுத்திப் பிரசாரம் புரிந்தார்கள். அந்தக் கஃபாவில் 360 விக்ரஹங்களை வைத்து அந்நாட்டாரனைவரும் வணங்கிவந்தனர். அவர்களுக்கெல்லாம் முன்னின்று விக்ரஹங்களுக்குப் பூஜை நடத்துவது யாரென்று நினைக்கின்றீர்கள்? அவர்தாம் சத்திய நபி (ஸல்) அவர்களின் பெரிய தந்தையும் போஷகருமான அபூதாலிபாயிருந்தார். *தாங்கள் பக்தியுடன் வணங்கிவந்த விக்ரஹங்கள் தெய்வங்களாகாவென்றும், ஏக தெய்வம் அல்லாஹ் ஒருவனேயாகுமென்றும் வலியுறுத்திக் கூறிய நபிகள் பெருமானர் அவர்களை அந்நகர்வாசிகள் சூழ்ந்து துன்புறுத்தத்தொடங்கினர். அதைக் கண்டு, நாயகமவர்களுக்குப் பரிந்து பேசவந்த ஹாரிஸ் என்னும்

விசுவாசி பொருவரை யாவருங்கூடி வாளுங்கிரையாக்கினுர்கள். இஸ்லாத்தின் சம்மந்தமாய், எதிரிகளின் பலாத்காரத்தின் பேரில் அநியாயமாய் இரத்தஞ் சிந்தப்பட்ட முதல்வர் ஹாரிஸேயாவர். (அவர்தம் ஆத்மாவிற்கு இறைவன் சாந்தியருள்வானாக!)

பெருமுயற்சியுடன் தங்களின் வேதக் கட்டளைகளைப் பரத்த வெளிவந்த நபீகள் திலகம் (ஸல்) அவர்கள், எதிரிகளின் அறியாமையாலான தொந்தரைகளைப் பெரிது பண்ணுமல், கண்ணுங் கருத்துமாய் ஒவ்வொரு பொதுக்கூட்டத்திலும், ஜனங்கள் சந்திக்கின்ற இடங்களிலும், விசேஷ தினங்களில் சபையோரிடத்திலும், அயல் நாட்டிலிருந்து வந்து போகின்ற வர்த்தகக் கூட்டத்தாரிடத்திலும், சுருங்கச்சொல்லுமிடத்து எங்கேயாவது நாலாறு பேர்கள் சேர்ந்து நிற்கின்றதைக் கண்டால் அவர்களிடத்திலும் தங்களின் உண்மை மார்க்கத்தைப் போதிக்கலானுர்கள். இவைகளைக் கண்ட அறபிக்குறைஷிகள் ஒன்றுஞ் செய்ய இயலாதவர்களாய் அபூதாலிபவர்களிடம் வந்து முறையிடலாயினர். பெருந்திரளான ஜனங்களின் முறையீட்டைக்கேட்ட நமது நாயகம் இரஸூல் (ஸல்) அவர்களின் பெரிய தந்தையாரவர்கள், நபீகள் திலகமவர்களை அழைத்து வைத்துக்கொண்டு, இதமான மொழிகளைக்கூறி, "அருமைப் புதல்வீர்! யான் தாங்கமுடியாத பாரத்தை என்மீது சுமத்தாதீர்கள்" என்று கேட்டுக்கொண்டார்கள். அதைச் செவியேற்றுத் தங்களின் பெரிய தந்தையாருடைய தைர்யக்குறைவை யுணர்ந்த நாயகமவர்கள் அவரை நோக்கி, "என் அரிய பெரியதந்தையே! என்னைப்படைத்தவன் மீதில் ஆணையாக என் ஒரு கரத்தில் சூரியனையும், மறு கரத்தில் சந்திரனையுங் கொண்டுவந்து வைத்துச் சமாதானப் படுத்தியபோதினுஞ் சரியே, இஸ்லாத்தின் பிரசாரத்தை யான் விட்டுப்போவதில்லை; சற்றும் பின்னடையவுமாட்டேன். ஆண்டவன் என்கடமையைப் பூர்த்தி செய்ய அருள்புரிவான். ஆகவின், இந்த ஸன்மார்க்கத்திற்காக யான் என்னையே தியாகஞ்செய்து விட்டேன்" என்று விழிநீர் ததும்ப வீரியத்துடன் கூறிவிட்டார்கள். என்னே நபீகள் பிரான் (ஸல்) அவர்களின் நல்லுறுதி!

தங்களின் பிரயாசைகள் எவ்வகையிலும் பிரயோஜனத்தைக் கொடுக்காததைக்கண்டு குறைஷீ முரடர்கள் ஏகோபித்துக்கூடி, அதுவரையில் இஸ்லாத்திலாகியிருந்த சொற்ப முஸ்லிம்களையும் அடாக்கொடுமை செய்யத் தலைப்பட்டு விட்டனர். முஸ்லிம்களைக் கண்ட கண்ட இடங்களில் மடக்கிக்கொண்டுதடிகளால் அடிப்பதும், ஏழைகளான முஸ்லிம்களைப் பலவந்தமாய் நிர்வாணப் படுத்திக் கொதிக்கும் மணலிற்போட்டு வாட்டுவதும், கழுத்துக்

களிலும், கால்களிலும் கயிற்றால் சுருக்கிட்டு வீதிகளில் கிடத்தி இழுப்பதும், இரும்புச்சலாகைகளைக் காய்ச்சிச் சூடு போடுவதும், இன்னும் சொல்லுந் தரமற்றவிதமான கொடுமைகளை யெல்லாம் இரக்கமின்றிச் செய்வதும் அக்கொடிய வன்னெஞ்சர்களின் வழக்கமாகி விட்டது. ஆ! நிரபராதிகளான தீங்கற்ற முஸ்லிம்களின் பேரில் அதுகாலைச் செய்யப்பட்டுவந்த கொடுமைகளைக் கேட்பாரற்றிருந்த நெருக்கடியான நிலைமைதானென்னே! உண்மைத் தத்துவத்தையும் மனோசாந்தியையுங்கண்டு, முஸ்லிமான ஒப்பற்ற உறுதியாளர்களின் திண்ணிய எண்ணத்தை இவ்வற்பச் சரீரத்தொல்லைகள் சிதைத்துவிடுதல் முடியுமோ? இல்லை. அவர்கள் அதிக்கிரமமாய்ச் செய்து வந்த துன்பங்கள் அனைத்தும், அந்த விசுவாசிகளின் மன நிலையை முன்னிலும் பன்மடங்கதிகமான உறுதியிலாக்கி, இஸ்லாத்தின் அஸ்திபாரத்தைப் பலப்படுத்தியதாகவே முடிந்தது. முஸ்லிம்களாயிருந்த அநேக அடிமைகளைக் கொடுமைப்படுத்தி, அவர்களின் உறுதியைக் கலைத்துப்பார்த்த அநேக சீமான்கள் அவ்வடிமைகள் கொண்டிருந்த மனவுறுதியின் வலிமையையும், இஸ்லாத்தினால் அவர்கள் அடைந்துள்ள சாந்தியையுங் கண்டு, தங்கள் தங்களின் மாறுபட்ட எண்ணத்தை மாற்றிப் பச்சாதாபப் பட்டவர்களாய் இஸ்லாத்தைத் தழுவலாயினர். கடைசிவரையில் உண்மையை ஒப்புக்கொள்ளாமல் மனசாக்ஷிக்கு விரோதமாய் இஸ்லாத்திற்கு எதிர்ப்பிரசாரஞ் செய்து, நபீகள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இன்னல் சூழ்ந்து வந்தவர்கள் அபூஜஹ்ல், அபீலஹப், உமையா, ஷைபா, ஸப்வான் முதலிய மக்கமா நகரின் குறைஷீகளே யாவர்.

இவர்கள் திரண்ட திரவியமும், சரீர பலாட்டியமும் உடையவர்களாய் ஜனக்கட்டுடன் இருந்த காரணத்தால் நபீகள் நாயகம் அவர்களுக்கு இடைஞ்சலாய்ப் பல அரசர்களையுந் தூண்டிவிட்டுக் கொண்டிருந்தனர். அவ்வாறு தூண்டி விடப்பட்ட திமிஷ்க் (டமாஸ்கஸ்) அதிபதியான ஹபீப் அரசர் மக்கமா நகருக்கு வந்து நமது சத்திய நபீ (ஸல்) அவர்களின் சாந்த குணத்தையும், தண்ணளியையும், அன்புடைமையோடு கூடிய இன்ப மொழியையும், சத்தியத் தன்மையையுங்கண்டு பரிசுத்த தீனுல் இஸ்லாத்திலாகித் தமதுடன் வந்திருந்த பரிவாரங்களையும் இஸ்லாத்தின் சாந்தி நிலயத்தில் புகுத்தி முஸ்லிம்களாய்த் திகழச் செய்தார். என்னே இஸ்லாத்தின் வெற்றி! இம் மன்னரவர்களை இஸ்லாத்தைத் தழுவும்படி செய்தது திருக் குர்ஆனில் அமைந்து கிடக்கின்ற மஹோன்னத தெய்விகத் தன்மையின் அருள் வாக்கியங்களும், அதையெடுத்து நடத்திக்காட்டிய நபீகள் திலகம் (ஸல்) அவர்களின் தூய நன்னடையுமே யன்றி, வேறு யாதாயிருத்தல்

முடியும்? இஸ்லாம் வாளைக்கொண்டு பரவியதாக அறியாத சில பிறமக்கள் கூறும் பதருரைகளுக்கு ஈங்கு இடமுண்டோ வென்று கவனிக்க வேண்டியதும் அவசியமே யன்றோ?

அத்தகைய உயரிய தெய்வீகத் தன்மையால் இஸ்லாம் பரவி வரும்போது நாயகமவர்களின் தந்தைவழியாரான ஹாஷிம் வகுப்பார்களை அந்தக்குறைஷீ குலத்தார் வெறுத்துத் தள்ளினர். நீர்வழக்கம் நெருப்பு வழக்கமும் இல்லாதவாறு செய்துவிட்டார்கள். இதன் காரணமாய் அபூதாலிபவர்கள் தங்கள் வகுப்பார்களை ஒதுக்கி ஒரு மலைப்பிரதேசத்தில் வசித்து வந்தார்கள். அங்கேயும் நமது நபீகள் நாயகமவர்கள் இடைவிடா ஊக்கத்தோடு, வரப் போக இருக்கின்ற ஹாஜ் கூட்டத்தார்களிடம் திடதைர்யமாய் இஸ்லாமியப் பிரசாரஞ் செய்து, திக்கனைத்தும் இஸ்லாத்தின் ஜோதி பரவச் செய்தனர். பிறகு குறைஷீகள் சடைவுகொண்டு ஹாஷிம் வகுப்பாரை விலக்கி வைத்துத் துன்புறுத்தியதைத் தாங்களாகவே விட்டுவிட்டார்கள்.

இந்தச் சமயத்தில் சத்திய நபீ (ஸல்) அவர்கட்கு ஓர் அபூர்வ காக்ஷி நடந்துள்ளது. அது மற்ற தீர்க்கதரிசி (நபீ)களுக்கு நடந்திலாததாகும். அதாவது, நமது நபீகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனின் சந்நிதானத்திற்கு உயர்த்தப்பெற்ற மிஃராஜேயாகும். அச் சம்பவத்தில், விண்ணவர்க்கரசர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் வந்தழைக்க நாயகம் முஹம்மது முஸ்தபா ரஸூல் (ஸல்) அவர்கள் உடன் சென்று, வானங் கடந்து இறைவனுடன் பாஷித்து, அவ்வல்லவனின் கட்டளைப்படி ஐந்து நேரத் தொழுகையை விதியாய்ப் பெற்று, அத்துடனே சாதாரண மனிதர்க்குப் புலப்படாத அநேகக் காக்ஷிகளைக்கண்டு, ஓரிரவுக்குள் மீண்டு வந்தார்கள். என்னே எம்பிரான் (ஸல்) அவர்களின் ஒப்பற்ற மகிமை! இது விஷயத்தைச் சத்தியத் திருநபீ (ஸல்) அவர்கள் கூறியவுடன், அவர்களின் மெய்ம்மைத் தோழர்கள் அப்படியே ஒப்புக்கொண்டு தினம் ஐவேளை தொழுவதைக் கடைப் பிடித்தனர்.

பின்பு நாயகம் இரஸூல் (ஸல்) அவர்கள் தங்களுக்கு நபீத்துவம் வந்த பத்தாவது வருஷத்தில் மக்கமா நகர்க்கு ஐம்பதுமைல் தூரத்திலுள்ள "தாயிப்" என்னும் மலைப்பிரதேசத்திற்குச் சென்று இஸ்லாமியப் பிரசாரம் புரிந்தார்கள். அப்பிரதேச மூடஜனங்கள் நாயகம் முஹம்மது நபீ (ஸல்) அவர்களைப் பொடிக் கற்களைக்கொண்டு தாக்கியதுடன் இன்னும் பல வகையிலும் அவமதித்துத் துரத்தினார்கள். அப்பிரதேசத்தார்

செய்த கொடுமைகளைச் சகிக்கமுடியாத ஜைத் (ரலி) அவர்கள் நாயகமவர்களைப் பார்த்து "இப் பிரதேசத்தார்களைச் சபியுங்கள்! இவர்கள் மிகவும் கொடுமை செய்கிறார்களே!" என்றார்கள். அதற்கு நமது கருணை நபீ கூறியதைப் பாருங்கள்! "ஜைதே! அவர்கள் நன்னெறியை ஒப்புக் கொள்ளாவிட்டாலும், அவர்களின் சந்ததிகளாவது நேர்வழியடைவார்கள்." என்று கூறினார்கள். அவ்வாறே சில வருஷங்களுக்குள் "தாயிப்" என்ற மலைப்பிரதேசத்தார் அனைவரும் இஸ்லாத்தின் இருஞ்சோதியில் ஈடுபட்டார்கள். என்னே நாயக முயற்சியின் நற்பயன்!

## இரஸூல் நாயகம் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செல்லல்

இஸ்லாத்தின் அபிவிர்த்தியைக் கண்ட எதிரிகள் மகா உரோஷங்கொண்டு எவ்வகையிலும் நபீகள் பிரான் (ஸல்) அவர்களைச் சதிசெய்து கொன்று விடுவதென்று முடிவுகட்டி விட்டார்கள். இதற்கிடையில் அபூபக்கர் (ரலி) என்ற தனவந்தரும், உமர் (ரலி) என்ற சுத்தவீரத்தலைவரும் ஹம்ஜா (ரலி) என்ற நாயகத்தின் சிறிய தந்தையும், இன்னும் பல பக்தியாளப் பெரியார்களும் இஸ்லாத்திற் சேர்ந்து விட்டார்கள். மதீனாவிலிருந்து வந்திருந்த ஒரு சிலர் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டதுடன் தங்களூருக்குச்சென்று அங்கே அரும்பிரசாரம் புரிந்து மதீனா வாசிகளையும் இஸ்லாத்திற் சேர்த்தார்கள். இவ்வாறு மதீனத்தின் விசுவாசிகள் அத்தியந்த பிரியத்துடன் இஸ்லாத்தைப் பரத்த முன்வந்தவுடன், மக்கமா நகரில் குறைஷிகளின் இடைவிடாத் தொந்தரவில் அகப்பட்டுத் துன்புற்றுவந்த முஸ்லிம்கள் மதீனாவிற்குக் குடியேறிவிடுதல் அவசியமாகிவிட்டது. அங்ஙனமே குடியேறிவிடலாமென்று இரஸூல் திலகமவர்களும் உத்திரவிட்டு விட்டார்கள். இது சமயம் நபீப்பட்டத்திற்குப் பின் பதினான்காவது ஆண்டு நடக்கின்றது. மதீனத்திற்குக் குடியேறுகின்ற முஸ்லிம்களைப்பார்த்த எதிரிகள் நபீகள்நாயகம் ரஸூல் (ஸல்) அவர்களைத் தாங்கள் நினைத்தபடி வதைப்பதற்குத் தக்கசமயம் வாய்த்ததாக எண்ணி, எதிரிகளின் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒவ்வோர் போர்வீரனைத் தேர்ந்தெடுத்து, யாவருமாய்ச் சேர்ந்து, ஒரு பெருங்கூட்டமாய் உருவியவாளுடன் நாயகமவர்களின் வீட்டைச்சுற்றிலும் முற்றுகைப் போட்டார்கள். அம்மம்ம! இவ்வஞ்சகக் கொடியவர்களின் நெஞ்சங்களில் உறைந்துகிடந்த வைரந்தானென்னே!.

இது சமயத்தில் நாயகமவர்கள் தாங்கள் மதீனத்திற்குப் பயணப்பட்டுக்கொண்டு வீட்டிலிருக்கின்ற அமானிதப்பொருள்

களை அவரவர்களிடஞ் சேர்த்துவிடும்படி அலீ (ரலி) அவர்களிடம் பொறுப்புச் சாட்டிக்கொண்டிருக்கிறார்கள். வெளியில் தங்களை வெட்டுவதற்காக வந்துள்ள தூர்த்தர்களின் அமானிதப் பொருள்கள் இதுவரையில் நாயகமவர்களிடமே இருக்கின்றதென்றால், அத்துஷ்டர்களிடம் நாயகமவர்கள் நடந்து காட்டி வந்திருக்கின்ற நம்பிக்கையை எவ்வாறு கூறமுடியும்? தங்களின் உயிர்க்கே முடிவுதேடி வந்தவர்களின் ஒரு சிலப் பொருள்களையும் நஷ்டப்படுத்த மனம் வராத நாயகமவர்களின் களங்கமற்ற தூய பரிசுத்தத் தன்மைக்கு வேறு உதாஹரணமும் வேண்டுமேயோ? இதோ சத்தியமும் அசத்தியமும் ஒன்று சேர்ந்திருக்கின்றதைப் போல், இறைவனது திருத்தூதர் முஹம்மது நபீ (ஸல்) அவர்களும் எதிரிகளும் ஒரு வீட்டினிடம் நெருங்கிவிட்டார்கள். வெற்றி பெறுவது சத்தியமா அல்லது அசத்தியமாவென்று கவனிப்போம்.

நாயகமவர்கள் அலீ (ரலி) அவர்களிடஞ் சொல்லவேண்டியவைகளைச் சொல்லிவிட்டு, நடு இரவில் தனித்தவர்களாய் வெளியில் வந்து அங்குக் கிடந்த எதிரிகளினிடையே, தைர்யமாய் நடந்து அபூபக்கர் (ரலி) அவர்களின் வீட்டுக்குச் சென்று, அவர்களையும் அழைத்துக்கொண்டு, திரு மதீனா நகரை நோக்கி நடக்கலானார்கள். எதிரிகள் வீட்டினுள் அலீ (ரலி) அவர்களின் அரவத்தைக்கேட்டு, நாயகமிருப்பதாய் எண்ணிக்கொண்டு விடியுமட்டுங் காத்திருந்து, விடிந்தபின் விஷயமுணர்ந்து, தங்களின் ஏமாற்றத்தின் தோல்வியை எண்ணித் தலை கவிழ்ந்தவர்களாய் நாணப்பட்டு, நாயகமவர்களின் தலையைக் கொண்டுவர நன்முடிவு கட்டினார்கள். என்னே இவர்களின் வீரஞ்சென்ற விரைவு!

176070

சத்திய நபீ (ஸல்) அவர்களும், அவர்களின் தோழர் அபூபக்கர் (ரலி) அவர்களும் மதீனா நகர்க்கு ஹிஜ்ரத்தாகி றபீஉல் அவ்வல்மீ 8ம்தேதி திங்கட்கிழமையன்று போய்ச் சேர்ந்தார்கள். மக்கமா நகரிலிருந்து சுமார் 300 மைல்கள் தூரத்திலுள்ள மதீனாவிற்குத் தங்களின் ஆஸ்தி, பூஸ்திதிகளை எல்லாம் விட்டுவிட்டுக் கால்நடையாய்ச் சென்ற முஸ்லிம்களின் ஹிஜ்ரத்தானது அவர்களின் மார்க்கத் தூய்மையை யெண்பித்துக் காட்டவில்லையா? தங்கள் நகர்க்கு வந்த சத்திய நபீ (ஸல்) அவர்களை மதீனத்தார்கள் வெகு ஆவலுடன் வரவேற்று நல்லுபசாரம் புரிந்தார்கள்.

## நபிகள் திலகமும் தற்காப்பு யுத்தங்களும்

முஸ்லிம்கள் திரு மதீனாவிற்குச் சென்றுவிட்ட பின்பும் மக்கத்தின் குறைஷிகள் தங்களின் பகைமையை விட்டாரல்லர். பன்முறை படையெடுத்து நிரபராதிகளான முஸ்லிம்களைத் தாக்குவதற்கு வந்தார்கள். முதன்முதலில் "உத்பா" என்பவன் ஓராயிரம் போர் வீரர்களுடன் முஸ்லிம்களை ஒழிக்க வந்தான். அதைக்கண்ட எம்பெருமானார் (ஸல்) அவர்கள் தங்களின் தோழர்களுடன் கலந்தாலோசித்துக் கொண்டு, இஸ்லாத்தை நிலைநிறுத்த வேறு வழியில்லையெனவுணர்ந்து, 133 முஸ்லிம் சுத்த வீரர்களுடன் தற்காப்பு யுத்தம் புரிந்தார்கள். இந்த யுத்தம் "பத்ரு" என்ற விடத்தில் ஹிஜ்ரீ இரண்டாவது வருஷம் நடந்ததாகும். இதில் முஸ்லிம்களுக்கே வெற்றியேற்பட்டு, எதிரிகளில் அபூஜஹ்லும் அவனுடைய தோழர்களான தலைவர்களும் கொல்லப்பட்டுப் போயினர். எதிரிகளில் 70 பேர் மடிந்து, 70 பேர் சிறையிடப்பட்டார்கள். முஸ்லிம்களில் 14 பேர்களே வீர சுவர்க்கம் அடைந்தார்கள். அநீதி நிலை நிற்காதென்பதற்கு இந்த யுத்தமே போதிய சாக்ஷியாகும்.

மேற்கண்ட "பத்ரு" என்னுமிடத்தில் நடந்த போரில் எதிரிகளுக்குப் புத்தி வந்ததாகத் தோன்றவில்லை. ஏனெனில், அவர்கள் மீண்டும் 'அபூசுப்யான்' என்னும் தலைவனின்கீழ் ஐயாயிரம் பேரைத் திரட்டிக்கொண்டு மதீனாவை நோக்கிப் போர் தொடுத்தார்கள். நபீகள் பெருமானார் (ஸல்) அவர்கள் 700 முஸ்லிம்களுடன் இறைவனிடம் பாரத்தைப் போட்டு யுத்தத்திற்குப் புறப்பட்டுவிட்டார்கள். இந்தப் பெரும் போர், ஹிஜ்ரீ 3-வது வருஷம் "உஹத்" என்னும் பெருந் திடலில் நடைபெற்றது. இதில் முஸ்லிம்கட்கு அதிகக் கஷ்ட நஷ்ட மேற்பட்டதானாலும், இதிலும் எதிரிகளுக்கு வெற்றி கிடைக்கவில்லை. தம்மைப் பகைத்துவந்த தம்மினும் ஏழுமடங்கு அதிகமான எதிரிகளுடன் வீரா வேசத்தோடு நின்று வெற்றிபெற முஸ்லிம் விசுவாசிகளின் சுத்த வீரத் தன்மையையும், அச்சொற்பத் தொகையினர்பால் ஏகவல்லோன் கொடுத்திருந்த இணையற்ற பேரருளையும் எவ்வாறு மறுத்தல் முடியும்? இவ்வளவிற்கும் எங்கள் நாயகம் முஹம்மது முஸ்தபா ரஸூல் (ஸல்) அவர்கள் ஆண்டவன்மீது கொண்டிருந்த பக்தியே காரணமாகும். அதன்பிறகு,

எதிரிகள் இனியில்லாக் கோபங்கொண்டு அறபிய மக்களையெல்லாம் ஒன்று சேர்த்துக்கொண்டு இருபத்து நான்காயிரம் படையினர்களுடன் ஹிஜ்ரீ 5-ம் ஆண்டில் மதீனாவை முற்று

கைப் போட்டார்கள். முஸ்லிம்கள் சொற்பத் தொகையின ராதலின், அகழ் தோண்டிக்கொண்டு அவ்வறபிய மறமாந்தரைத் தீரத்தோடு எதிர்க்க முன்வந்தார்கள். இக்கொடும் போர் மூன்று வாரங்கள் வரையில் நீடித்து நடந்ததால், உணவுப் பொருட்களுக்குத் கோதில்லாமல் எதிரிகள் தாங்களாகவே கலைந்து ஓடிவிட்டனர். இவ்வாறு பன்முறை யுத்தங்கள் நேரிட்டும், அவைகளிலெல்லாம் ஆண்டவனுதவியால் முஸ்லிம் களே ஜயங்கொண்டார்கள். என்னே இறைவன் அருள்கிடந்த வாறு! ஹிஜ்ரீ 6-வது வருஷம் இவ்வுலக இறுதி நபீகள் நாதர் (ஸல்) அவர்கள் 1400 முஸ்லிம்களுடன் திரு மக்கமா நகர்க்கு ஹஜ்ஜு செய்ய யாத்திரை யானார்கள். இது சமயத்திலும் அந்த மறமக்கள் இடைஞ்சல் செய்யாமலில்லை. முடிவில் 'ஹுதைபிய்யா' என்னுமிடத்தில் நடந்த உடன்படிக்கையில் முஸ்லிம்கள் அடுத்த வருஷம் மக்கமா நகர்க்கு வந்து கஃபாவைத் தரிசிக் கின்றதென்றும், அதுமுதல் 10 வருஷங்கள் வரையில் இருசாரா ரிடத்திலும் போர் முழக்கம் கூடாதென்றும் தீர்மானிக்கப் பெற்றது.

சர்வ வல்லமைகளுக்கும் உரியவனுகிய ஏகத்துவ ஆண்டவ னின் திருத்தூதர் முஹம்மது நபீ (ஸல்) அவர்கள் திருமதீனு நகரின்கண் அமைதியுடன் அரசுபுரிய ஆரம்பித்தார்கள். பல மன்னர்களுக்கும் இஸ்லாத்தின் சுப சோபனத்தைக் குறித் தெழுதி நிருபம் விடுத்து, இஸ்லாத்தைத் தழுவும் வண்ணம் அழைத்தார்கள். அவர்களின் நிருபத்தைக் கண்ணுற்ற பஹ்ரைன் உம்மான், நஜ்த், கஸ்ஸான், தூமத்துல்ஜந்தல், யமன் ஆகிய நாடுகளின் அரசர்களெல்லாரும் இஸ்லாத்தின் விசால நோக்கத் தையும், சகோதரத்துவத்தையும், சகல நியதிகளின் அமைவையும் உணர்ந்து உடனே இஸ்லாத்தை ஒப்புக்கொண்டு முஸ்லிம் களாயினர். ஒரு சில மன்னர்கள் உண்மை உணர்ந்தும் பகிரங்க மாய் இஸ்லாமாகப் பயந்து குடிகளுக்கு அஞ்சி, நமது சத்திய நபீ (ஸல்) அவர்களுக்கு அரிய பெரிய ஸன்மானங்களை யெல்லாம் அனுப்பிவைத்தனர்.

குறைஷீகள் தாங்கள் ஹுதைபிய்யாவில் செய்துகொடுத்த உடன்படிக்கைக்கு மீறி, இரண்டாவதாண்டிற்குள் முஸ்லிம்களைச் சார்ந்த 'குஜாஆ' க்களைச் சதிமோசமாய்த் தாக்கிவிட்டார்கள்.

இதன் காரணமாய் ஹிஜ்ரீ 8-வது வருஷம் றமலான் மாதம் 10-ம் தேதி இஸ்லாமியக் கொடி நிழலில் பத்தாயிரம் முஸ்லிம் வீரர்கள் மக்கா நகரை நோக்கிப் படை யெடுத்தார்கள். நகர்ப் புறம் வந்துள்ள முஸ்லிம்களைக் கண்ட மக்கத்தின் சேனு வீரனுன "அபூ ஸுப்யான்" தனது வாளைப் பணியவைத்து உடன் படிக்கைக்கு மாறு செய்ததற்குப் பச்சாதாபப் பட்டதுடன் தீனுல் இஸ்லாத்தைத் தழுவி முஸ்லிமானுர். முஸ்லிம்கள் அனைவரும் குதூகலத்துடன் நகரிற் புகுந்து அமைதியான வாழ்க்கை நடத்தத் தொடங்கினுர்கள். நமது சத்திய நபீ (ஸல்) அவர்கள் தங்களின் இளம்பிராயத்தில் திருமக்கா ஷரீபை எவ்வாறு காணவேண்டுமென்று நாடினுர்களோ அதே நாட்டம் போல் இன்றே கண்டு மகிழ்ந்தார்கள். விக்ரகங்களைத் தொலைத்து, கஃபத்துல்லா (ஹ்) பரிசுத்தமாக்கப் பெற்றதன்பின், ஹபீபுல்லா (ஹ்) முஹம்மது நபீ (ஸல்) அவர்கள் 'மிம்பர்' மேடையின் மீதேறி நின்று, இறைவனின் ஏகத்துவத்தையும், இஸ்லாத்தின் பரிபூரணத்தையும், சமூகச் சகோதரத்துவத்தையும், உலக வாழ்க்கையின் நியதிகளையும் இனிதெடுத்து உபதேசித்தார்கள். யாவரும், "சத்தியம் வந்துவிட்டது. அசத்தியம் அழிந்து விட்டது. திண்ணமாக அசத்தியம் அழிவதேயானது." என்ற வேதமொழியின் உண்மைத் தன்மையை உணர்ந்து கொண்டார்கள்.

## இஸ்லாத்தின் அரிய நோக்கங்கள்

இறைவனுடைய திருத் தூதரவர்கள் இத்தரணியின்கண் போதித்த இஸ்லாத்தின் உயரிய நோக்கங்கள் யாவை யென்பதைக் கவனிப்போம்:— பல நூற்றுக் கணக்கான விக்ர கங்களை வைத்து வணங்கிக்கொண்டு ஒற்றுமை யில்லாமல் மௌட்டியத்தில் ஆழ்ந்து கிடந்தவர்கள் உய்யும் வண்ணம், ஏக தெய்வக் கொள்கையை நிலைநாட்டி, கோட்டி முதல் தொண்ட மான்வரையில் யாவரும் சமத்துவமாய் நின்று ஒவ்வொரு தின மும் ஐந்து முறை தொழுகும்படி செய்தார்கள். ஒற்றுமைக் குலைவுக்குக் காரணமா யிருந்த மதுவருந்துகிறதையும், வட்டி வாங்குகிறதையும் கண்டித்து விலக்கி, ஒற்றுமையையும், ஒருவர்க் கொருவர் தாராளமாய் உதவிக்கொள்வதையும் நிலை நிறுத்தினுர்

கள். சமூகத்தின் ஒரு பாதி அங்கத்தினர்களான பெண்களுக்குச் சொத்து உரிமையையும், அனந்தரச் சொத்துப் பாத்தியதைகளையும் ஏற்படுத்தி, விதவா விவாகம், விவாக ரத்து முதலிய சௌகரியங்களைச் செய்தார்கள். காலமுழுதும் வயிறு புடைக்க வுண்டு அளவிறந்த மாதர்களை மணந்து, தங்களின் வாழ்க்கையைத் தொந்தவிலாக்கி மிருக சுபாவத்திலிருந்தவர்களிடம், வருஷத்தில், ஒருமாதம் முழுவதும் பகலில் உண்ணவிரதமிருக்க வேண்டுமென்றும், ஒருவன் அரசனானாலும் அடியானானாலும் ஒரே சமயத்தில் நான்கு மனைவியர்க்கு மேல் மணந்து கொள்ளக் கூடாதென்றும் வரையறை ஏற்படுத்தி யாவரையும் இன்ப வாழ்க்கையி லாக்கினார்கள். ஐசுவரியவான்கள் ஏழை மக்களைக் கொடுமை செய்து தாழ்விலாக்கி வந்தது ஒழிந்து, யாவரும் சமம் என்பது தோன்ற, ஒருவனுக்கு எச்செலவும் போக வருஷத்தில் 50 ரூபாய்ச் சில்லறை மிச்சப்பட்டால் அதிலிருந்து 1¼ ரூபாய்ச் சில்லறை ஏழை வரி கொடுத்துதவ வேண்டுமென்று கட்டளையிட்டார்கள். இறைவனால் கட்டளை யிடப்பெற்று, ஆதம் (அலை) அவர்களின் காலமுதலாய் யாவரும் ஹஜ்ஜு செய்ததையும், நமது சத்திய நபீ (ஸல்) அவர்களும் அவர்களைச் சேர்ந்தோர்களும் எதிர் நோக்கித் தொழுததையும் ஒப்புக்கொண்டு ஒற்றுமையை யெண்பிக்கும் பொருட்டும், ஒவ்வொருவரும் "கிணற்றுத் தவளையே போல்" தன் ஊரிலிருந்துகொண்டு உலக விஷயங்களை யுணராமற் போய்விடாதிருக்கும் பொருட்டும் மக்கமா நகர்க்கு யாத்திரை செல்வதைக் கடமையாக்கினார்கள். அதுவும் திரண்ட திரவியமும், தேகதிடனும், வழித்துணையு முடையவர்க்கே கடமையாகும்படி செய்தார்கள். இன்னும்,

ஒருவர்க்கொருவர் நட்பும் ஐக்கியமும் கொள்வதற்காக ஒருவரை யொருவர் சந்தித்தால் (அஸ்ஸலாமு அலைக்கும்) "சாந்தி உம்மீது உண்டாவதாக!" என்று வாழ்த்தும்படியும், சமபந்தி போஜனம் செய்யும்படியும் தூண்டினார்கள். சுருங்கச் சொல்லுமிடத்து, சீர்திருத்தக்கார ரென்று இனி உலகத்திற்கு வேண்டப்படாத முறையில், அனைத்தையும், இறைவனனுப்பிய இறுதியின் பூர்த்தியான திருவேதத்தைக் கொண்டு அமைத்தருளினார்கள். இதற்கு அத்தாக்ஷியாக, பிறகு உலகில் தோன்றிய மகான்களெல்

லாரும் மேற்கண்ட ஆயிரத்துப் பன்னூறு வருஷங்களுக்கு முன் வந்த குர்ஆனின் சட்டதிட்டங்களையும், போதனைகளையுமே நிலை நாட்ட முயற்சியெடுத்துக் கொண்டார்களென்பதையும், குர்ஆனில் இல்லாத எந்தச் சீர்திருத்தத்தையும் புதிதாகச் செய்து விடவில்லையென்பதையுங் காணலாம். இறைவனது திருவேதத்தின் பூர்த்திதானென்னே! அன்றியும்;

இக்காலத்தவர்களில் பல அயல்மதவாதிகள் தங்களின் மதக் கோட்பாடுகளுக்கு மாறாகத் தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்றும், விதவா விவாகஞ் செய்யவேண்டுமென்றும், மதுவை ஒழிக்கவேண்டுமென்றும் கடும் பிரசாரஞ் செய்வதுடன் சத்தியாக்கிரகமும் மறியலுஞ் செய்யத் துணிந்துவிட்டனர். இன்னும் பலர் விக்ரக வணக்கத்தையே ஒழிக்கக் கங்கணங்கட்டிச் சத்தியாக்கிரகஞ் செய்ய முற்பட்டிருக்கின்றனர். இவர்கள் இன்றைக்குக் கண்விழித்துச் சத்தியாக்கிரகத்தின் மூலமாயும், இடைவிடாத மறியலின் மூலமாயும் ஒடுக்கத் தலைப்பட்டிருக்கின்ற அனுசாரங்களை எமது நபீகள் திலகம் (ஸல்) அவர்கள் ஒருவித மனித உதவியும் மறியலுமின்றி ஆயிரத்துப் பன்னூற்றுக் கணக்கான வருடங்களுக்கு முன்னேயே இன்சுவை பொருந்திய பிரசங்கத்தைக் கொண்டும் மொழிவது நிலைக்க நடத்திக்காட்டிய நன்னடையைக் கொண்டும் தொலைத்து, உலகமெங்கும் ஒரேவித அனுஷ்டானங்களைச் செய்யும்படியான இஸ்லாம் மார்க்கத்தைப் பரப்பியதன் நன்றியை இவ்வகிலத்தார் அனைவரும் பாராட்டவேண்டியதும் மறுக்கமுடியாக் கடமையேயன்றோ? அத்தகைய கடமையை அயல் மதவாதிகள் நன்குணர்ந்து நன்றி செலுத்த முற்பட்டிருக்கின்றனரென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். ஆகவே, இறைவனின் திருவருளைக்கொண்டு திருத்தியமைக்க முடியாத அவ்வளவு பூர்த்தியுடன் அயல்மதவாதிகளுங் கண்டவுடன் எடுத்து நடக்கும்படியாய் மக்கட் பூண்டுக்கு அவசியமான சட்டதிட்டங்களைக் கொண்டதாயுள்ள ஸன்மார்க்கப் பொக்கிஷமான திருக் குர்ஆனின் தெய்விக தீனுல் இஸ்லாத்தையே சர்வ மதச் சகோதரர்களும் உலக மதமாகக் கொள்ளப்போகின்றனரென்பது யாவரும் மறுக்கமுடியா உண்மையாகும். அவ்வளவு உயர்ந்த சத்தியத் திருவேதத்தை அகிலத்தார்க்குப் போதித்த சத்திய நபீ (ஸல்) அவர்கட்கே சுபசோபனம் உண்டாவதாக!

## இறுதி ஹஜ்ஜும் எம்பிரான் பிரிவும்

இத்தகைய ஒப்பற்ற விதமாய் வாழ்ந்து வந்த நபீகள் நாயகம் (ஸல்) அவர்களின் அத்தியந்த தோழர்கள் அபூபக்கர் (ரலி) உமர் (ரலி), உதுமான் (ரலி), அலீ (ரலி) அவர்களாகிய நால்வருமாவர். நாயகமவர்கள் தங்களின் 50 பிராயம் வரையில் ஹஜ்ரத் கதீஜா (ரலி) அவர்களுடனேயே மணவாழ்க்கை நடத்திவந்து, அம் மூதாட்டியாரவர்கள் மரணித்தபின் அபூபக்கர் (ரலி) அவர்களின் அருமந்த புதல்வி ஆயிஷா நாயகியாரவர்களை மணந்து கொண்டார்கள். அத்துடனே இன்னுஞ் சில சந்தர்ப்பங்களில் பெண்களுக்கு ஆதரவிழந்து பரிதபிக்கின்ற நிலைமை யுண்டான போது அவர்களை ஆதரிக்கும் நன்னோக்கத்துடன் சில பெண்களையும் விவாகஞ் செய்து காப்பாற்றி வந்தார்கள். என்னே சத்திய நபீ (ஸல்) அவர்களின் தயை யிருந்தவாறு!

நாயகமவர்கள் தங்களின் அருமைப் புதல்வியாகிய பாத்திமா (ரலி) அவர்களைத் தங்களின் பெரிய தந்தையராகிய அபூத்தாலி பவர்களின் செல்வப் புதல்வர் அலீ (ரலி) அவர்களுக்கு மணமுடித்துக் கொடுத்தார்கள். இன்னும் தங்களின் இரண்டு பெண்மக்களை ஒன்றன்பின் ஒன்ருய் உதுமான் (ரலி) அவர்களுக்கு விவாகஞ் செய்து வைத்தார்கள். பாத்திமா நாயகியார் (ரலி) அவர்களின் புத்திரர்களான ஹஸன் (ரலி) ஹுஸைன் (ரலி) அவர்களாம் பௌத்திர சிகாமணிகளைப் பிரியமுடன் வளர்த்தார்கள். குடும்ப விஷயங்களிலும், சமூக விஷயங்களிலும், மார்க்க விஷயங்களிலும், அரசாங்க ராஜீக விஷயங்களிலும், நபீத்துவ விஷயங்களிலும் இனியில்லா விதமாய் நடந்துகாட்டிய நாயகம் முஹம்மது நபீ (ஸல்) அவர்களின் மஹோன்னத மேம்பாட்டை யாரே நவிலவல்லார்?

ஆரம்பத்திலே தாய்தந்தையற்ற அனாதைச் சிறுவராய், பிறகு பொறுப்புள்ள மேய்ப்பராய், பின்பு வர்த்தகத் திலகமாய், பின்னல் மணவாள மாண்பராய், அதன்பின் போர்வீரப் புருஷராய் அதன் பிறகு தவங்கிடந்த தாசராய், இறுதியின் இரஸூலாய், அதற்குப்பிறகு மன்னாதி மன்னராய், மார்க்கோபதேசியாய்ச் சகலமக்களுக்கும் சற்குருவாய் விளங்கிவந்த இரஸூல்

நாயகம் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களின் மேன்மையைத் தாங்கி மகிழ்கின்ற இவ்வுலகின் பாக்கியமே பாக்கியம்! உலகமெங்கும் சத்தியமும் அன்பும் சரியளாவிப் பரந்து; மக்களிடம் சாந்திவதிய அவதரித்த சமரஸ மூர்த்தியாம் நபீகள் பெருமானார் (ஸல்) அவர்கள் கடைசியாக ஹஜ்ஜுக்குப் புறப்பட்டார்கள். அவர்களின் மெய்விசுவாசிகளான முஸ்லிம் தோழர்களினின்றும் சுமார் லக்ஷத்து ஐம்பதினாயிரவர் நபீகள் நாயகத்துடன் மக்கமா நகர்க்கு யாத்திரையானார்கள். அங்கே யாவருங்கூடி, நாயகம் ரஸூல் (ஸல்) அவர்களின் கடைசி உபதேசத்தைக் கேட்டார்கள். அந்த இறுதி ஹஜ்ஜாகிய "ஹஜ்ஜத்துல் விதாஃ"வின் பூர்த்தியுடன் நாயகமவர்கள் மதீனாவந்து சேர்ந்தார்கள். அதன்பின் சில வாரங்களில் ஹிஜ்ரீ 11-வது வருஷம் ஸபர் மாதத்தில் உலக ஞானப் பிதாவான கருணையங்கடல் ஹபீபு றப்பில் ஆலமீன்; காத்தமுன்னபிய்யீன் முஹம்மது முஸ்தபா ரஸூல் (ஸல்) அவர்களின் திரு மேனியில் மரணப் பிணி வந்துதொட்டது. தங்களின் மெய்த்தோழர்களும் பந்து மித்திரர்களும் புடைசூழ்ந்திருக்க; றபீஉல் அவ்வல்-மீ 12ம் தேதி திங்கட்கிழமையன்று தங்களின் அறுபத்து மூன்றாவது பிராயத்திலே திரு மதீனா நகரின் நடுவில் இறைவனருள் கட்டளையின்படி இந்த அநித்திய மண்ணுலகை நீத்து விண்ணுலகெய்தினார்கள். (இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்) ஆ! உலக ஞான சூரியன் இவ்வுலகினை விட்டு மறைந்ததா? இல்லை, இல்லை. மணங்கமழ் அநித்திய சரீரம் மிகச் சிறப்புடன் நல்லடக்கஞ் செய்யப்பெற ஞான சூரியன் உலக முடிவுகால மட்டும் அதற்குப் பின்பும் மறையாமல் நின்றிலங்கிக்கொண்டேயிருக்கின்றது. வஸ்ஸலாம்.

ஸல்லல்லாஹு அலா முஹம்மதின் ஸல்லல்லாஹு
அலைஹி வஸல்லம்.

# சத்திய நபி^ஸல் ஜனித்ததின வாழ்த்துப்பாக்கள்

['காந்தி ரிஷி' என்ற மெட்டு]

(பல்லவி)

நாளிதுவே திரு நன்னபீ நாளிதுவே

(அநுபல்லவி)

அல்லாஹ்வின் தூதரென அன்புடனே வந்தநபீ
ஆத்மாவின் பக்குவத்தை ஆவலுடன் தந்தநபீ
எல்லார்க்கும் நல்லருளாய் இவ்வுலகில் வந்தநபீ
ஏற்றநல் வேதமதை எங்கெங்குந் தந்தநபீ

(பல்லவி எடுப்பு)

மாந்தருக்கே ஸன் மார்க்கத்தைச் சொன்ன நபீ (நாளிதுவே)

(சரணங்கள்)

1. மாந்தர் சமத்துவமாய் வாழ வழி செய்தநபீ
மாதர் சுதந்தரத்தை மாண்புறவே பெய்தநபீ
சாந்தித் திருமறையைச் சகமெங்கும் பெய்தநபீ
சாஷ்டாங்கஞ் செய்திறையைச் சார்ந்தின்ப மெய்தநபீ
வாழ்வதையே நல் மாகத்தொகுத்த நபீ (நாளிதுவே)

2. நோன்பின் மகத்துவத்தால் நோற்றருளைப் பெற்றநபீ
நட்ப வணக்கமதில் நோக்கித்தவம் உற்றநபீ
மாண்பின் கொடைவகையால் மாவறுமை செற்றநபீ
மன்னுதி மன்னவராய் மாட்சிபல பெற்றநபீ
சாந்திநபீ திரு சாத்விக சத்யநபீ (நாளிதுவே)

3. விதவை களுக்குமணம் வேண்டுமெனப் போற்றுநபீ
வேதந் தனைப்புகட்டி மேதினியை ஏற்றுநபீ
பதவி தனையுயர்த்திப் பாவையரைத் தேற்றுநபீ
பண்பாக மானிடரின் பாதகத்தை மாற்றுநபீ
நீதநபீ மொழி நேர்மையின் போதநபீ (நாளிதுவே)

4. அன்பை உலகினர்க்கே ஆகாரங் காட்டுநபீ
அஞ்ஞான சாகரத்தை அடியோடே ஓட்டுநபீ
தென்பாகப் போர்புரியுந் தீரமதை யூட்டுநபீ
தேர்ச்சியாம் வர்த்தகத்தில் சீர்த்திமிக மூட்டுநபீ
வீரநபீ நல்ல விகசித ஜோதிநபீ (நாளிதுவே)

5. எல்லா நபீகளுக்கும் ஈற்றினிலே வந்தநபீ
எந்நாடும் ஏற்றுநிற்கும் இஸ்லாத்தைத் தந்தநபீ
பொல்லாரைச் சீர்திருத்தும் போதனைநி றைந்தநபீ
பொன்மொழி யாலுலகைப் புதுக்கச சிறந்தநபீ
மார்க்கத்தையே நிறை பூர்த்தியிற் செய்தநபீ (நாளிது)

6. வேண்டிய சீர்திருத்தம் வெகுவாக செய்தநபீ
விரோதி களுக்குந்தயை வேண்டியே செய்தநபீ
தூண்டியே வையகத்தைத் தூக்கியிதஞ் செய்தநபீ
துன்பத்தி லாழ்ந்தவர்க்குத் தோன்றுதுணை செய்தநபீ
பாவலரே புகழ் பாடிட வந்தநபீ (நாளிதுவே)

வஸ்ஸலாம்.

பாரதி பிரஸ், மன்னார்குடி.

# சத்திய இஸ்லாம்

## உயரிய செந்தமிழ் முஸ்லிம் வாரப் பத்திரிகை

பத்திராதிபர்கள்:— பாவலர், S. M. முஹம்மது யூஸுப் ஸாஹிப்,
மௌலவீ, ஹாபிஸ், N. T. N. அப்துல்காதிர் ஸாஹிப் (நூரீ)

அன்பு நிறைந்த சகோதரீர்!

இந்தப் பத்திரிகையானது நமது தென்னாட்டுத் தமிழ் ஜனங்களின் சமூகச் சீர்திருத்தத்திற்கும், கல்வி அபிவிருத்திக்கும், அரசியல் சுதந்தரத்திற்கும், ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கும் அரும் பாடுபடுவதுடன், தீனுல் இஸ்லாத்தின் உயரிய நன்னோக்கங்களை இனிய முறையில் பிரசாரஞ் செய்யும் பெருமுயற்சியில் ஈடுபட்டுழைக்கக் கங்கணங்கட்டி நிற்கின்றது. சுருக்கக்கூறுமிடத்து. இதன்கண் ஸன்மார்க்க விஷயங்கள், சற்குண ஒழுக்கங்கள், வேத நியதிகள், விவேக விளக்கங்கள், அற்புத நாவல்கள், ஆத்மார்த்த ரகசியங்கள், மங்கையர் மாட்சிகள், மாநில வர்த்தமானங்கள் அனைத்தும் மலிந்து மிளிர்கின்றன. ஆராய்ச்சிமிக்க அறிஞர் பலரின் அரிய வியாசங்கள் எங்குந் திகழ்கின்றன. பொதுநலத்தையும் சமூக முன்னேற்றத்தையுங் கருதிக் குறைந்த சந்தாவே ஏற்படுத்தியுள்ளோம். ஆதலின், அன்பர்கள் யாவரும் சந்தாதாரர்களாய்ச் சேர்வார்களாக!

குறிப்பு:— எமது "சத்திய இஸ்லாம்" பத்திரிகையில் குறைந்த விகிதத்திற்குச் சிறந்த முறையில் விளம்பரங்கள் செய்து கொடுக்கப்பெறும். மாதிரிப் பிரதி வேண்டுவோர் ஓரணா ஸ்டாம்ப் அனுப்புதல்வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| வருஷ சந்தா:— | உள்நாட்டிற்கு | ரூ. 4—0—0. | வெளிநாட்டிற்கு | ரூ. 6—0—0. |
| அரை வருஷ சந்தா:— | ,, | ரூ. 2—8—0. | ,, | ரூ. 3—8—0. |

பத்திராதிபர், சத்திய இஸ்லாம் ஆபீஸ், மன்னார்குடி.